**ஜூலை - 29**

**"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்."**

**- தானி 3 : 17.**

கர்த்தருடைய பராமரிப்புக்கள் வேறுபடுகின்றன. எப்பொழுது தெளிவாக முற்றிலுமாக தங்களுடைய விரோதிகளுடைய சித்தத்துக்குத் தாங்கள் விடப்படுவார்களென்றும் அப்பொழுது தங்கள் சார்பாக தெய்வீக தயவு வெளிப்படுத்தப்படாமலிருக்கும் பொழுது, எப்பொழுது குறிப்பிடத்தக்க விடுதலை தங்களுக்குக் கிடைக்குமென்றும் முடிவுகட்டுவது அவருடைய ஜனங்களுக்கு அடுத்ததல்ல. காவலில் வைக்கப்பட்டோ அல்லது வேறுவிதமாகக் கட்டப்பட்டோ, சத்தியத்தை வெளிப்படையாக அறிவிக்கத் தடைபண்ணப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஜனங்கள், சில வேளைகளில் அந்த மூன்று எபிரேயருக்கு நேர்ந்தது போல, நெருப்புக் கட்டுகளை எரித்து தங்களை விடுவிக்கிறதையும், அதன் மூலமாக உண்மையாகவே தங்களுடைய தேவனின் மகிமையைக் குறித்துச் சாட்சி கொடுக்க வேறு எந்த மார்க்கத்தினாலும் தங்களுக்குக் கிடைத்திராத முன்னிலும் அதிக அளவான சந்தர்ப்பத்தை தங்களுக்குக் கொடுக்கிறதையும் காண்கிறார்கள். ஆகையால், நமது சம்பந்தமாக தெய்வீக பராமரிப்பு எதுவாயிருக்குமென்று முன்கூட்டியே முடிவு செய்வது நமக்கடுத்தது அல்ல. நாம் நியாயம், உரிமை, கடமை இவைகளின் முக்கிய விஷயத்தைக் கவனித்து விளைவுகளில் அக்கறை கொள்ளாமல், முழுமனதுடன் கர்த்தரிடத்தில் நம்பிக்கைவைத்து அதைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். **- Z ’99, 171 (R 2494)**

பயமுறுத்தலும் எரிகிற அக்கினிச் சூளையின் அபாயமும் இந்த எபிரேயர்களுக்கு இருப்பினும், உறுதியான பின்வாங்காத தைரியத்தையும் கீழ்ப்படிதலையும் ஆயுதமாகத் தரித்திருக்கும்படி தேவனுடைய விடுவிக்கும் வல்லமையில் விசுவாசம் வைத்திருந்தார்கள். சிறு ஆச்சரியம், அவர்கள் அந்தக் கொடிய நெருப்பை அணைத்த மனுஷ குமாரனின் பிரசன்னத்தினாலே கனம் பண்ணப்பட்டார்கள். அதுபோலவே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், ராணுவத்தின் ஆவிக்கும், ரோமன் கத்தோலிக்க மார்க்கத்துக்கும், புரோடெஸ்டண்டரின் கூட்டு ஸ்தாபனத்திற்கும் தலைவணங்காத காரணத்தால், அடையாளமான எரிகிற அக்கினிச் சூளையினால் பயமுறுத்தப்படும்பொழுது, அதனுள் பிரவேசிக்கும் பொழுதும், மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தோடு கனம் பண்ணப்படும் அந்த விசுவாசத்தை அப்பியாசிக்கலாம். நமக்கு அந்த அனுபவத்தினாலே, தீங்கு ஏற்படாமல் அவர் எரிகிற அக்கினிச் சூளையை, இவ்வுலகக் கட்டுகளிலிருந்து நம்மை விடுவிக்கிற கருவியாக்குவார். **- P ’26, 96.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஆதி 49:22-26; எஸ்றா 8:31; சங் 23; 34:7,9,10; மத் 5:10-12; அப் 5:29,40-42; ரோம 8:17,35-37; எபி 11:33-38; வெளி 20:4.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 55 (R 5633)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் எந்த அனுபவங்களிலிருந்து விடுதலையடைந்தேன்? எப்படி? எது உதவியது? அல்லது தடுத்தது? அது எதில் முடிந்தது?**